# மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.01.12 சபையமர்வு அறிக்கை

2022.01.12ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும். அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு, சபை அறிக்கை தொடர்பாக கூறலாமென நினைக்கின்றேன். கடந்தகால சபை அறிக்கை கேளி கூத்தாகவே உள்ளது, இத்தனை வருடத்திற்கு பிறகும் இச்சபையறிக்கை இவ்வாறு அமைந்துள்ளது, இதில் முதலாவது விடயமான எமது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.இராதாகிருஸ்ணன் அவர்கள் எமது பிரதேச சபையின் உறுப்பினர்களாகிய கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார், கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன், கௌரவ உறுப்பினர் ஏ.ரவீந்திரராஜா ஆகியோருக்கு வீதி விளக்குகள் பொருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு அது தொடர்பாக சபையில் பேசப்பட்டது. ஆனால் அவ்வேலைத்திட்டத்திற்கு எம் மூவருக்கும் சபை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சபையறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் சபை அனுமதிக்கு முன்வைக்கப்பட்டிருந்தாலும் கூட, அறிக்கையில் எம் மூவரினூடாக இவ்வேலைத்திட்டத்தை செய்ய சபை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது எங்கள் மூவருக்கும் ஒதுக்கப்பட்ட நிதி சபை நிதி அல்ல. இதனை இவ்விடத்தில் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபைக்கு முன்னைய சபையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் அவர்களினால் மின்விளக்கு பொருத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள கடிதம் முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் அவ்வேலைத்திட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் பெயரையும் குறிப்பிடுமாறு கடந்த சபையில் தாங்கள் குறிப்பிட்டதற்கு அமைவாக தான் கடந்த மாத சபையறிக்கையில் திருத்தப்பட்ட விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நான் குறிப்பிட்டிருந்தேன், ஆனால் பிரதேச செயலகத்தில் இருந்து வந்த கடிதத்தில் கௌரவ உறுப்பினர் 03 பேரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. எங்களின் ஊடாக இவ்வேலைத்திட்டத்தை செய்ய சபை அனுமதியினை நாங்கள் கேட்கவில்லை. சபையினூடாக இவ்வேலைத்திட்டத்தை செய்ய அனுமதியினை கோரினோமே தவிர கௌரவ உறுப்பினர்களினூடாக செய்ய அனுமதியினை கேட்கவில்லை. கடந்த கால அறிக்கையை நன்றாக உற்று நோக்கினால் என்னுடைய உரையில் இவ்விடயம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த கால அறிக்கையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அவ்வேலைத்திட்டத்தை செய்ய சபை அனுமதி வழங்கியிருந்தது. அதன் பின்னர் தாங்கள் கேட்டுக்கொண்டதற்கமைய தானே கௌரவ உறுப்பினர்கள் 03 பேரின் பெயரை குறிப்பிட்டு திருத்தம் செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கமைய தான் அவ்விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அது சரி கௌரவ தவிசாளர் அவர்களே, இங்குள்ள வசனம் பிழையாக உள்ளது. எவ்விடத்திலும் சபை இம்மூவரின் பெயரை முன்மொழியவும் இல்லை, பெயரை குறிப்பிடவும் இல்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

பெயரை இணைத்துக்கொள்ளுமாறு தாங்கள் தான் கேட்டீர்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நான் தான் கேட்டேன், ஆனால் எந்த இடத்திலாவது சபை எங்களின் பெயரை முன்மொழிந்து வழிமொழிந்ததா இல்லையே, கருத்து பிழையாக உள்ளது. அடுத்ததாக கடந்த சபையமர்வின் போது இடைக்கிடை சில பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணமே இருந்தது. அதில் ஒரு இடத்தில் பொதுசபையாக சபை மற்றப்பட்டது என்றால் பொது சபையாக மாற்றும் முன்னும் பின்னரும் அதனை முன்மொழிந்து வழிமொழிய வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு செய்யப்படவில்லை. வெறுமனே தவிசாளர் அவர்கள் மாத்திரமே சபையினை பொது சபையாக மாற்றுவதாக குறிப்பிட்டுள்ளார்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அச்சந்தர்ப்பத்தில் கௌரவ உறுப்பினர் கே.சுரேஸ்குமார் அவர்கள், பொது சபையாக மாற்றுவதாக இருந்தால் முன்மொழிந்து வழிமொழிய வேண்டும், அவ்வாறு செய்யப்படாமையினால் அவ்வேளையில் பேசப்பட்ட அனைத்து விடயங்களும் அறிக்கையில் வரவேண்டும் என்று கூறியதற்கமைய தான் அந்நேரத்தில் பேசப்பட்ட விடயங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் மீண்டும் சபை ஆரம்பிக்கப்படுகின்றதென்ற விடயத்திற்கு ஏன் தாங்கள் வந்தீர்கள்? அப்படியானால் பொதுசபையாக்கப்பட்ட விடயங்கள் அறிக்கையில் வந்திருக்க கூடாது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவ்விடயங்கள் அறிக்கையில் வரவேண்டும் என்று கௌரவ உறுப்பினர் கூறிய பின்னர் எவ்வாறு தான் அவற்றை இணைக்காமல் இருப்பது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கடைசியாக ஒரு விடயத்தை கூறலாமென நினைக்கின்றேன், கடந்த சபையில் மோசமான சம்பங்கள் நடைபெற்றிருந்தது, அதனை நாம் அனைவரும் அவதானித்துக்கொண்டு தான் இருக்கின்றோம், ஆனால் சபையறிக்கையில் குறித்த இடத்திற்கு பின்னர் சபையை நிறைவு செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அவ்விடத்தில் தவிசாளர் அவர்கள் இறுதி வரை இருந்தீர்கள். 02 பேருக்கு இடையில் வாய் தகராறு ஏற்பட்டது. கௌரவ உப தவிசாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர் ஆனந்தராஜ் அவர்களை தாக்க முற்பட்டதாகவும் கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தராஜ் அவர்கள் கௌரவ உப தவிசாளர் அவர்களை தாக்க முற்பட்டதாக குறிப்பிடப்பட்டதும் சபை இனிதே நிறைவுற்றதாக கூறி சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் கடந்த சபையில் என்ன நடந்ததென்று தவிசாளர் அவர்களுக்கே நன்றாக தெரியும். அன்றைய தினம் சபையமர்வு முடிக்கப்பட்டதா? ஒத்திவைக்கப்பட்டதா? இல்லையென்றால் அடுத்தமாத சபையமர்விற்கான திகதி குறிப்பிடப்பட்டதா? தவிசாளர் என்ற ஆசனத்திற்கு செல்லும் போது கட்சி சார்பாகவோ நிறம் சார்பாகவோ தாங்கள் எவ்விதத்திலும் செயற்பட கூடாதென இந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சபையில் எவ்வித பிரச்சினை ஏற்பட்டாலும் இறுதிவரை தனது ஆசனத்திலிருந்து தவிசாளர் அவர்கள் சபையினை நிறைவு செய்யும் வரை அங்கேயே இருக்க வேண்டும். ஆனால் அன்றைய தினம் தவிசாளர் அவர்கள் அவ்வாறா நடந்துக்கொண்டீர்கள் என்பதனை மனம் திறந்து சொல்லுங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உப தவிசாளர் அவர்கள் அன்றைய சபையமர்வின் போது கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையினை ஆதரித்து பேசும் சந்தர்ப்பத்திலே, கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தராஜ் அவர்களை குறிப்பிட்டு நிதிக்குழுவில் விடயமொன்று பேசப்பட்டதென கூறி தகாத வாரத்தை பிரயோகம் ஒன்றை செய்தார். அதன் பின்னர் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கண்ணாடி குவளையும் வீசப்பட்டது. நானும் என்னால் முடிந்தவரை இதனை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டேன், மேசையினை தட்டிப்பார்த்தேன். தவிசாளரின் பேச்சுக்கு மதிப்பளிக்கும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அதன் பின்னர் நான் கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களிடமும் சபையினை முடிக்க போவதாக கூறி சபையினை நிறைவு செய்தேன். ஏனென்றால் ஒரு கட்டத்திற்கு மேல் சபையினை தொடர்ந்து நடத்த முடியாதா நிலை

ஏற்பட்டது, இத்துடன் சபையை முடிக்கின்றேன். அடுத்த மாதம் அடுத்த சபை நடைபெறும் என்று கூறிவிட்டு சபையை முடித்து விட்டு சென்று கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தராஜ் அவர்களை ஏசினேன். சபையில் முறையாக நடந்துக்கொள்ளும் படி கூறினேன். சபையினை முடித்துவிட்டு தான் நான் ஆசனத்தில் இருந்து எழுந்தேன், இது தொடர்பான ஒலிநாடாவும் உள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சபையினை முடித்து விட்டு தாங்கள் ஆசனத்தில் இருந்து இறங்கவில்லை. அப்பொழுது சபையில் ஒரு கலங்கம் ஏற்பட்டதென நாங்கள் கூறினோம். முறைகேடான நிகழ்வுகள் சபையில் நடைபெற்றுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் சபையின் தவிசாளர், நேரத்திற்கு நேரம் மாற்றி பேச வேண்டிய தேவை எனக்கில்லை, 02 பேருக்கு இடையில் வாக்குவாதம், தகாத வார்த்தை பிரயோகங்கள், என்னால் சபையினை தொடர்ந்து நடத்த முடியாத நிலை எனவே சயினை நான் இத்துடன் முடிக்கின்றேன் என்று கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தாங்கள் கூறும் விடயம் இங்குள்ள அனைவருக்கும் கேள்விக்குறிதான் வழமையாக சபையினை எவ்வாறு முடிப்போம், இம்முறை எவ்வாறு முடித்தோம் என்பது அனைவருக்கும் தெரியும். அன்றைய தினம் சபையின் தவிசாளர் பொறுமையாக இருந்து சபையினை அமைதிக்கு கொண்டு வர வேண்டி கட்டாயத்தில் இருந்தீர்கள் அவ்விடத்தில் அவ்வாறு நடைபெறவில்லை. தவிசாளர் ஆசனத்தில் இருக்கும் போது கட்சி சார்பாகவோ, இனம் சார்பாகவோ இருக்க கூடாது, அனைவருக்கும் பொதுவாக இருந்து அன்றைய சபையினை தாங்கள் முடித்திருக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இதுவரை நான் அப்படி தான் உள்ளேன், நான் அன்றைய தினம் எத்தனையோ முறை கேட்டுப்பார்த்தேன், அவ்வளவு தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தினர்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சரி, கௌரவ தவிசாளர் அவர்களே அன்றைய தினம் அதன் பின்னர் எந்த விடயமும் நடைபெறவில்லையா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபை முடிந்ததன் பின்னர் நடைபெறும் விடயங்களுக்கு நான் பொறுப்பு கூற இயலாது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சபை அச்சந்தர்ப்பத்தில் முடிக்கப்படவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வேண்டுமானால் ஒலி நாடாவை கேட்டுப்பாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

ஒலி நாடாவை எப்படியும் மாற்றியமைக்கலாம். சரி சம்பவம் நடந்த போது தாங்கள் இல்லையா? கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்கள் கௌரவ உப தவிசாளரை தாக்கிய போது தாங்கள் சபையில் இருக்கவில்லையா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையினை முடித்து விட்டு தான் நான் அவரிடம் சென்று பேசிக்கொண்டிருந்தேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சபை முடிந்த பின் அவ்விடயம் நடைபெற்றிருந்தாலும் ஒரு விசேட அறிவித்தலின் ஊடாக சரி அறிக்கையில் அவ்விடயம் வந்திருக்க வேண்டும். சபையில் நடைபெற்ற விடயம் தானே? வேறு எங்கேயும் இல்லையே? அப்படிப்பட்ட விடயத்தை ஏன் அறிக்கையில் போட மறுக்கின்றீர்கள்? அப்படியானால் தாங்கள் ஒரு பக்க சார்பாக தான் நடந்துள்ளீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபை நிறைவுற்றதன் பின்னர் நடைபெறும் விடயங்களை அறிக்கையில் போட முடியாது, நான் எச்சந்தர்ப்பத்திலும் பக்க சார்பாக நடந்துக்கொள்ளவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இதிலிருந்தே விளங்குகின்றது, அன்று நீங்கள் ஒரு பக்க சார்பாக தான் முடிவெடுத்தீர்கள். எனவே எச்சந்தர்ப்பத்திலும் இவ்வறிக்கையினை ஏற்றுக்கொள்ள முடியாது.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

இந்த கௌரவ சபையிலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அன்றைய தினம் சட்டவிரோத கட்டிடங்கள் அமைப்பது தொடர்பில் அதிக விடயங்களை நான் மஸ்கெலியா பிரதேச சபையில் முன்வைத்திருந்தேன். சிலரின் உதவியுடன் மஸ்கெலியா பிரதான கால்வாயில் தூண்கள் இடப்பட்டு கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. உடைத்து அப்புறப்படுத்தும் படி மஸ்கெலியா பிரதேச சபையில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தொடர்புப்பட்ட ஒரு நபர் அதனை உடைத்து அப்புறப்படுத்துவதாக வாக்குமூலம் அளித்துள்ளார். ஒருசிலர் உதவி புரிவதால், பிரதேச சபைகள் கட்டளை சட்டத்திட்டங்களுக்கு அஞ்சாது அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் அவ்வேளையில் நான் எனது கருத்துக்களைக் கூறிக்கொண்டிருந்தேன். ஏன் எம்மால் இக்கட்டிடத்தை அகற்ற முடியாதா? அதற்கான காரணம் என்ன? என்றெல்லாம் நான் கேட்கும் போது தான் அப்பிரச்சினை ஏற்பட்டது. அவ்வாறான நிலையிலே பொதுக்கூட்ட அறிக்கையிலே குறிப்பிடப்படுகின்றது, நான் உரையாற்றும் போது அதாவது இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது நான் பெயரை குறிப்பிட வேண்டும் ஆனந்தராஜ் என்ற உறுப்பினர் எனது உரைக்கு தடை ஏற்படுத்தினார். தடை ஏற்படும் போது நான் அவரை நோக்கி கண்ணாடி குவளையினால் அடித்தேன், அவர் எனக்கு கண்ணாடி குவளையால் தண்ணீரை அடித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் என்னை பாதணியினை கொண்டு அடிக்க வந்தார் அது ஏன் அறிக்கையில் வரவில்லை? கௌரவ தவிசாளர் அவர்களே அதற்கு மேலதிகமாக இவ்விடத்திலே கௌவர உறுப்பினரின் உரைக்கு பதிலளிக்கப்பட்டது. இதனை சபையறிக்கையில் உட்படுத்த முடியாது சபை முடிவுற்ற வேளையில் தான் பிரச்சினை ஏற்றபட்டது என்று குறிப்பிடப்படுகின்றது. எனினும் இந்நிலை ஏற்பட்டது சபை அமர்வின் போது தான். அப்போது கௌரவ தவிசாளர் அவர்கள் அவருடைய ஆசனத்தில் அமர்ந்து இருந்தார். இந்த பத்திரிகையில் உரிய நபர் அதாவது, பொது ஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் திஸாநாயக்க அவர்கள் என்னை அடித்துள்ளார். லங்கா தீப பத்திரிகை அதே போன்று நிறைய பத்திரிகைகள் இங்கே இருக்கின்றன். நிறைய பத்திரிகைகளுக்கு அவர் குறிப்பிட்டுள்ளார். “அனுமதி பெறாத எனது கட்டிட நிர்மான வேலையின் போது” நான் இதனை வாசிப்பதற்காக கௌரவ செயலாளர் அவர்களிடம் கையளிக்கின்றேன். கௌரவ செயலாளர் அவர்களே இதனை சற்று தெளிவாக வாசியுங்கள். இந்த பத்திரிகை உரிய நபரின் வாக்கமூலமாகும். பொலிசில் இருக்கின்ற வாக்குமூலமும் இந்த சபையறிக்கையில் காணப்படும் வாக்குமூலமும் 03 வாக்குமூலமும் ஒன்றுக்கொன்று வேறுபாடானது. பொலிசில் காணப்படும் வாக்குமூலமும் இந்த பத்திரிகையிலே இருக்கின்ற வாக்குமூலமும் ஊடகங்களுக்கு வழங்கியுள்ள வாக்குமூலமும் 03ம் ஒன்று. இந்த சபையறிக்கையில் உள்ளது மாத்திரம் தான் மாறுபட்டது. என்ன மாறுபட்டுள்ளது? ஏதே ஒன்றை இங்கே மறைக்கின்றீர்கள் என்று தான் எங்களுக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. கௌரவ தவிசாளர் அவர்களே தாங்கள் இங்கே ஒரு உத்தியோகப்பூர்வமற்ற நீதிபதி , அதாவது அனைவருக்கும் பொதுவாக சேவையாற்றும் உத்தியோகபூர்வமற்ற நீதிபதி ஆகும். நீங்கள் சுயாதீனமாக செயற்பட்டிருந்தால் இப்படி ஒரு சம்பவம் ஏற்பட்டிருக்காது. எனது வேண்டுகோள் இதுவாகும். அன்றைய தினம் சபையில் ஏற்பட்ட சம்பவம் வருத்தத்திற்குரிய சம்பவம் என்பதால் அதனை நான் கண்டிக்கின்றேன். இவ்வாறான சம்பவங்கள் மஸ்கெலியா பிரதேச சபையில் மாத்திரமல்ல வேறு எந்த ஒரு பிரதேச சபையிலும் நடைபெறாத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அனைவருக்கும் இவ்வாறு கறுப்பு பட்டியினை அணிந்து பிரதேச சபைக்குள்ளே இருக்கின்ற சட்டம் அதற்குள்ள கௌரவம் ஆகியன பாதுகாக்கும்படி கேட்கின்றார்கள். இவ்வாறான சம்பவம் மஸ்கெலியா பிரதேச சபைக்குள் மாத்திரம் அல்ல வேறு எந்தவொரு பிரதேச சபையிலும் நடைபெறக்கூடாது என்று கேட்பதால் தான் நாங்கள் இன்று

நாங்கள் கௌரவ சபைக்கு கறுப்புபட்டி அணிந்து வருகை தந்துள்ளோம் என எனது கருத்தை முன்வைத்து கௌரவ செயலாளரிடம் பத்திரிகையினை கையளிக்கின்றேன். இதிலே ஒரு பகுதியினை தற்போது வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். செயலாளர் அவர்களே தாங்கள் இதனை மொழிபெயர்ப்பு செய்யுங்கள். ஒரு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளீர்கள் அல்லவா, செயலாளர் அவர்களே இங்கே நிறைய பத்திரிகைகள் இருக்கின்றது. மேலே இருந்து இந்த பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினரை ஏன் தாக்கினீர்கள் என்று இந்த பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஏ.திஸாநாயக்க அவர்களிடம் நாம் கேட்ட போது அவர் கூறியதாவது, மஸ்கெலியா பிரதேசத்திலே ஒரு நபருடைய வீட்டிற்கு உள்நுழையும் வீதி ஒன்றை நிர்மானிப்பதற்கு உதவ அனுமதி பெற்று வீதியினை நிர்மான பணி செய்துக்கொண்டிருக்கும் போது அதற்கு விருப்பமில்லாத அப்போது இந்த கதை எங்கே உள்ளது. சபையில் கதைக்கும் ஒன்று. சபை மூடப்பட்டது என்று தவிசாளர் கூறுகின்றார். ஊடகவியலாளர்கள் இதனைப் பார்த்துக் கொள்ளுங்கள். இதுவா ஜனநாயகம். எந்த ஒரு சபையிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற கூடாத வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு இச்சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்வதுடன், கௌரவ தவிசாளர் அவர்களை நான் எச்சந்தர்ப்பத்திலும் குறை கூற மாட்டேன். தவிசாளர் அவர்களிடம் சட்டத்தையும் ஜனநாயகத்தையும் சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறு நான் கேட்டுக்கொள்வதுடன், இன்றைய தினம் மஸ்கெலியா பிரதேச சபையிலே முன்வைக்கப்பட்டுள்ள டிசம்பர் மாத 13ம் திகதிக்கான சபை அறிக்கையினை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம் என்பதனையும் கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உப தலைவர் பேசியதற்கிணங்க அனுமதியற்ற ஒரு கட்டிடம் தொடர்பாக இங்குள்ள உறுப்பினர் ஒருவர் தான் சம்பந்தப்பட்டுள்ளார், இது தொடர்பான கடிதத்தை கௌரவ ஆளுனருக்கும் ஆணையாளர் அவர்களும் கையளிக்கவுள்ளேன். குறிப்பிட்ட ஒரு கௌரவ உறுப்பினர் தான் அவர்களை கட்டிடத்தை அமைக்குமாறு கூறியுள்ளார், மீண்டும் அதே உறுப்பினர் சென்று அதனை உடைக்க சொல்கின்றார். இவ்வாறான சூழ்நிலையில் நாமே சென்று கட்டிடத்தை அமைக்க வேண்டாமென நிறுத்துகின்றோம், பொலிசில் முறைப்பாடு செய்கின்றோம். பின்னர் கட்ட சொல்கின்றனர். இதே போன்று தான் மஸ்கெலியாவில் நடைபெறுகின்றது. நான் அனைத்து உறுப்பினர்களையும் கூறவில்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் இதனை நிறுத்திக்கொள்ளவும். சபை அறிக்கை தொடர்பான விடயத்தில் எவ்வித கட்சி சார்ந்த உறுப்பினராக நான் செயற்படவில்லை. எனது கட்சி உறுப்பினர்கள் கேட்கும் வேலைகளை விட எதிர்கட்சி உறுப்பினர்கள் கேட்கும் வேலைகளை தான் நான் அதிகமாக செய்துக்கொடுத்துள்ளேன். சபை ஆரம்பித்து இந்த 04 வருடங்களில் என் கட்சி சார்ந்த எந்த உறுப்பினருக்கும் எவ்வித சலுகைகளையும் நான் பெற்றுக்கொடுக்கவில்லை. இதனை எல்லா இடத்திலும் என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

2021.12.13ம் அன்று நடைபெற்ற சபையறிக்கை தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக இங்கு நாம் பேசிக்கொண்டு இருக்கும் அதே வேளை அன்றைய தினம் சபையில் நடைபெற்ற பிரச்சினைகள் தொடர்பாக முறையான ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஒரு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக இங்கு கறுப்பு பட்டியினை அணிந்து எமது எதிர்ப்பை இங்கு வெளியிட்டுள்ளோம். குறிப்பிட்ட சபையறிக்கையில் இறுதிப்பக்கம் 02 இடங்களில் உப தவிசாளரின் உரை இடம்பெற்றுள்ளது. 16ம் பக்கம் எனது உரை இடம்பெற்றுள்ளது. கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையுடன் தொடர்புபட்டு சில விடயங்களை கூறியிருந்தேன். இறுதிப்பக்கங்களை உற்று நோக்குவோமாக இருந்தால் அன்று அப்பிரச்சினை ஏன் வன்முறையாக மாறியது என்பதற்கு சில சாட்சிகள் கிடைக்கும். கடந்த சபையில் நாம் ஏற்கனவே சட்ட விரோத கட்டிடங்கள் தொடர்பாக நிறைய பேசியுள்ளோம். இக்கட்டிடங்கள் தொடர்பாக குழு ஒன்றையும் கூட்டியிருந்தோம், அதன் மூலம் எந்த பயனுமே இல்லை, இந்த கட்டிடம் தொடர்பாக உப தவிசாளர் அவர்கள் பேசி அவ்விடயம் கௌரவ உறுப்பினர் ஆனந்தராஜ் அவர்களுடன் வாய்தர்க்கமாக மாறும் போதே தவிசாளர் அவர்கள் உறுப்பினர் ஆனந்தராஜ் அவர்களின் பக்கம் சென்று விட்டீர்கள் அதற்கிடைப்பட்ட சந்தர்ப்பத்தில் நடைபெற்ற விடயங்கள் அறிக்கையில் வந்திருந்தால் அறிக்கையினை நாங்கள் முழுமைப்படுத்தப்பட்ட அறிக்கையாக பார்க்கலாம். செயலாளர் அவர்கள் அறிக்கைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையினை இத்துடன் முடிக்கின்றேன் என்று தான் நான் ஆசனத்தில் இருந்து எழுந்து சென்றேன். நான் அமைதியாகும் படி எவ்வளவு சத்தமாக கூறியும் யாரும் அதனை கேட்கவில்லை. அதன் பின்னர் தான் சபையை முடித்தேன். ஒலி நாடா இருக்கின்றது, வேண்டுமானால் அதனை கேட்கலாம்.சூ

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஒலி நாடாவை போடுங்கள், எங்களுக்கு பிரச்சினை இல்லை. அதனை நாங்கள் கேட்க வேண்டும். நாங்கள் சபையில் தான் இருந்தோம். அதனை கண்ணால் பார்த்தோம். தவிசாளர் சில வார்த்தை பிரயோகங்களையும் பிரயோகித்திருந்தீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அமைதியாக இருக்கும் படி தான் நான் கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தாங்கள் கத்தாதீர்கள் என்று கூறினீர்கள், அவ்வாறு கூறியதன் பின்னர் தான் இங்கு நாயே இல்லை கத்துவதற்கு என்று நான் கூறினேன் அவ்வாறான விடயங்களும் அறிக்கையில் வந்திருக்க வேண்டும். அதெல்லாம் வராமைக்கு செயலாளர் எங்களுக்கு பொறுப்பு கூற வேண்டும். இங்கு தாங்கள் பாரபட்சம் காட்டியுள்ளீர்கள் என்பதற்காக தான் இதனை கூறுகின்றேன். நடைமுறையில் நாங்கள் பார்த்துள்ளோம், தவிசாளர் கட்சி சார்ந்து இல்லை, அரசியல் சார்ந்து இல்லை என்று தவிசாளர்களும் உறுப்பினர்களும் கூறுவதனை நாங்கள் பார்த்துள்ளோம். அவர்களின் அரசியல் சார்ந்த நிகழ்ச்சி நிரலுக்கு கீழாக செல்ல வேண்டிய நிலை ஏற்படும் அதனை தவிர்க்க முடியாது. அந்தந்த கட்சி அடிப்படையில் சில விடயங்கள் இருக்கம். நீங்கள் கூறிய வார்த்தை ஏன் அறிக்கையில் வரவில்லை என்பதற்கு நிர்வாகத்திற்கு பொறுப்பான அதிகாரி என்ற வகையில் செயலாளர் அவர்கள் எங்களுக்கு பொறுப்பு கூற வேண்டும். உண்மை மறைக்கப்பட கூடாது என்பதனை அறிக்கை தயாரிக்கும் உத்தியோகத்தர்களுக்கும் கூறிக்கொள்கின்றேன். சில வேளைகளில் அறிக்கை அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக அறிக்கை இவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சபையின் தவிசளார் இவ்வாறான வார்த்தை பிரயோகங்களை பிரயோகித்திருப்பது சரியா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் அவ்வாறு கூறவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வேண்டுமானால் இதற்கும் ஒலி பதிவை கேட்டு பார்க்கவும், சில வேளை அவ்விடயம் ஒலிப்பதிவில் அழிக்கப்பட்டிருக்கலாம். சபை ஆரம்பிக்கும் முன்னரே திட்டமிட்டு இந்த சபையில் தாங்களால் எனது பெயர் வெளியில் நடைபெற்ற சம்பங்களினால் சோடிக்கப்பட்டது. அவற்றையெல்லாம் நான் இது வரையில் சுட்டிக்காட்டவில்லை, ஆனால் அவற்றை தற்போது சமூகத்தை அடிப்படையாக வைத்து சுட்டிக்காட்ட வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமை பறிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக தான் அன்று நான் எழும்பினேனே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் கௌரவ தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட தாங்களையோ, மேலும் உப தவிசாளரையோ கட்சி சார்ந்த உறுப்பினர்களையோ எச்சந்தர்ப்பத்திலும் யாரையும் அசௌகரியத்திற்கு உட்படுத்தப்படவில்லை. நாங்கள் நேரடியாக முரண்பட்டது ஆணையாளருடனும் அது சம்பந்தப்பட பொலிசாரருடன் தான். ஆனால் எந்த அடிப்படையில் நான் பழிவாங்கப்பட்டேன் என்பது எனக்கு தெரியும். இச்சபையில் நானும் அதிக வாக்குகளை பெற்று வந்த ஒரு உறுப்பினர். கௌரவ உபதவிசாளர் அவர்களை தாக்கியதை சபையறிக்கையில் தான் வரவில்லை. இந்த ஆசனங்கள் இதே வரிசை ஒழுங்கில் இருக்கும் போது தான் இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்றது. கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கும் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்களுக்கும் எவ்வித கருத்து முரண்பாடும் ஏற்படவில்லை. தாக்குதல் இடம்பெற்றமையின் காரணமாக தான் நாங்கள் கௌரவ உறுப்பினர்களாக பின் இருக்கின்றோம். இதற்கு முன் நிறைய இடங்களில் வாய்தர்க்கம் நடைபெற்றிருந்தது, அதற்கெல்லாம் நாம் நியாயாம் பேச போனதில்லை. இந்த ஆட்சி அமைவதற்கும் சரி சபையில் எவ்வித விடயங்கள் தொடர்பாக தவிசாளர் பேசினாலும் அதெற்கெல்லாம் உப தவிசாளர் அவர்கள் அதற்கு சார்பாக தான் இருந்திருக்கின்றார். இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். உண்மைகள் மறைக்கப்பட கூடாது. அன்றைய சபையமர்வு நிறைவு செய்யப்பட்டிருந்தால் அடுத்த சபைக்கான திகதி வைக்கப்படவில்லையே. அடுத்த சபைக்கான திகதி வைக்கப்பட்டிருந்தால் அதற்கான ஒலி நாடா உள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வருடம் ஆரம்பிக்கும் போதே அடுத்து வரும் மாதங்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டிருக்கும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எல்லாப்பக்கமும் நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு தாங்களுக்கும் செயலாளருக்கும் உள்ளது. அவ்வாறு இங்கு நீதி நிலை நாட்டப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. இந்த அறிக்கை முழுமையாக இல்லை. மறைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான நான் கூட்டிக்காட்டியுள்ளேன். எங்களை போல அரச கடமைகளை பொறுபேற்றும் போது செயலாளர் அவர்களும் சத்திய பிரமாணம் எடுத்திருப்பார் அன்றைய தினம் கௌரவ தவிசாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட மூவரை வெளியேற்றியிருக்கலாம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் அன்றைய தினம் கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பொலிசாரையோ உத்தியோகத்தர்களையோ சரி அழைத்து அவர்களை வெளியேற்றியிருக்கலாம், அவற்றையெல்லாம் செய்யவில்லை. எனவே இவ்விடயம் தொடர்பாக தவிசாளர் அவர்களும் செயலாளர் அவர்களும் முறையான விசாரணை ஒன்றை செய்ய செய்ய வேண்டும். தனிப்பட்ட பிரச்சினைகளை இங்கு கொண்டு வர வேண்டாம். உள்ளூராட்சி துணை ஆணையாளரும், உள்ளூராட்சி ஆணையாளரும் கூட பக்க சார்பாக உள்ளது போல தான் தெரிகின்றது. ஆளுனர் அவர்களும் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். ஏனைய இடங்களில் எல்லாம் எல்லா விடயங்களையும் தேடிபார்த்து நடவடிக்கை எடுக்கும் உள்ளூராட்சி திணைக்களம் ஏன் இங்கு மாத்திரம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமைக்கு காரணம் என்ன? இந்த விடயங்களில் எந்த உத்தியோகத்தர்களாக இருக்கட்டும் உள்ளூராட்சி துணை ஆணையாளராக இருக்கட்டும் பரிசோகராக இருக்கட்டும், ஆணையாளரும் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பதில் தான் பிரச்சினை உள்ளது. ஆணையாளரும் உதவி ஆணையாளர் அவர்களும் நேர்மையானவர்களாக இருந்தால் மஸ்கெலியா பிரதேச சபையின் அறிக்கைகளை பார்த்து அதன் பின்னணியில் இருக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு பிரச்சினை ஏற்படுவதற்கு மையமாக இருந்த விடயம் என்னவென்று தேடி பார்க்காமல் மறைக்கப்பட்டு மறைக்கப்பட்டு அனுப்பப்படுவதன் விளைவாக இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மீண்டும் இவ்வாறான ஒரு விடயம் நடைபெறாமல் இருக்க உள்ளூராட்சி ஆணையாளரும் உள்ளூராட்சி துணை ஆணையாளரும் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. அவ்வாறு இல்லாதவிடத்து இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்களுக்கும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருக்கும் ஆளுனருக்கு தெரியும் வகையில் ஆளுனர் காரியாலயத்திற்கு முன் அமர்ந்து அனைத்து அறிக்கைகளையும் காட்டி எவ்வளவு பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளது, இதற்கு முறையான தீர்வுகள் எட்டப்படவில்லை, துணைபோயியுள்ளனர் என்று கூற வேண்டிய தேவைப்பாடுடன் உள்ளோம் என்பதனை கூறி இந்த சபையில் பேசப்படும் நிறைய விடயங்கள் அறிக்கையில் மறைக்கப்பட்டுள்ளது. இதற்காக செயலாளர் அவர்கள் பொறுப்பு கூற வேண்டும். சபை விழுமியங்களுக்கு அப்பால் நாங்கள் செயலாளர் அவர்களுக்கு சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். தலைவர் பதிலளிக்க வேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் செயலாளர் பொறுப்பை சுமந்துள்ளார். எவ்வாறு இவ்வாறான பொறுப்புகளை எல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களோ அவ்வாறான நிலையில் உறுப்பினர்களுக்கு நடந்த அசௌகரியத்தை மறைத்தது எங்களுக்கு அசௌகரியமாக உள்ளது. பிரேரணை தொடர்பாகவோ வேறு விடயம் தொடர்பாகவோ எழுப்பப்படும் கேள்விகளுக்கு தவிசாளரை நேரடியாக பதில் கூறினால் நன்றாக இருக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஏன் நான் கூறியுள்ளேன் தானே? நிர்வாக ரீதியாக கேட்கப்படும் விடயங்களுக்கு தான் செயலாளர் பதில் கூறியுள்ளார்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் சட்ட விடயங்கள் போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி செயலாளர் அவர்கள் அத்தீர்மானங்களை தோற்கடித்துள்ளார். சட்டப்புத்தகத்தில் பல விடயங்கள் இருக்கும், அதிகாரம் என்ற ஒன்று வந்ததும் பிரதேச நலனுக்குக்காக செயற்பட வேண்டிய நிலை இருக்கும், அதனை செய்ய தவறியுள்ளீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சட்டங்களை மீறி செய்ய போனால் இச்சபையில் இன்னும் பிரச்சினைகள் கூடும், தவிசாளர் என்ற ரீதியில் என்ன செய்ய வேண்டும் என்பதனை நான் முறையாக முன்னெடுத்து வருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த அறிக்கையினை முன்மொழிந்து, வழிமொழிவதற்கு அப்பால் நாங்கள் எங்களின் கரங்களை உயர்த்தி இவ்வறிக்கை முற்று முழுதாக திரிபுப்படுத்தப்பட்டுள்ளது, என அறிக்கைக்கு எதிராக எங்களின் கரங்களை உயர்த்தி எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். மேலும் இவ்விடயம் தொடர்பாக முழுமையாக விசாரணை ஒன்றை மேற்கொண்டு உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி துணை ஆணையாளர் மற்றும் ஆளுனருக்கு பூரணப்படுத்தப்பட்ட கடித்தை அனுப்பி அதன் பிரதியினை 07 உறுப்பினர்களுக்கு தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையில் நடைபெற்ற விடயம் தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்பட்டது, அக்கடித்திலும் சபை அறிக்கையில் உள்ளது போல ஒரு சாரார் சார்பாக உள்ளது?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அன்று நடைபெற்ற அனைத்து சம்பவங்களும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் சுரேஸ் குறிப்பிட்டது போல அவர்களின் தரப்பிலிருந்து தவிசாளருக்கு எதிராக பல்வேறு விதமான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையில் அவற்றிற்கெல்லாம் குரல் கொடுத்தது நான். எந்த இடத்திலும் கௌரவ தவிசாளரை நான் விட்டுக்கொடுக்கவில்லை. இவ்விடயத்தில் தாங்கள் பக்கசார்பாக செயற்பட கூடாது. அப்படி பார்த்தால் என்பக்கம் தான் தவிசாளர் அவர்கள் இருந்திருக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் பக்க சார்பாக நடக்கவில்லை, சபையில் என்ன நடைபெற்றதோ அதனை தான் கடித்தில் அனுப்பியுள்ளேன். பேசிய விடயங்கள் தான் அறிக்கையில் வந்துள்ளது. நான் யாரும் பேசியதை அறிக்கையில் வராமல் எல்லாம் ஒன்றும் செய்யவில்லை. கடந்த சபையில் கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கும், கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தராஜ் ஆகிய இருவருக்குமே சொல்லி பார்த்தேன், மேசையை தட்டினேன் யாரும் கேட்கவில்லை எனவே நான் சபையயை முடித்து விட்டு சென்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்வருடம் அனைவருக்கும் சிறந்த வருடமாக அமைய வேண்டும் என்று கடவுளை வேண்டிக்கொள்வதுடன், அறிக்கை தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள், கௌரவ உப தவிசாளர் ஆகியோர் குறைபாடுகளை சுட்டிக்காட்டினர். உண்மையில் அறிக்கையில் சில குறைபாடுகள் உள்ளன. இச்சபையில் எதிர்கட்சி, ஆளுங்கட்சி என்றவொரு விடயம் அல்ல. சபைக்கெனதான் தவிசாளர் உள்ளார். சபையை வழிநடத்தும் போது , உப தவிசாளர் அவர்கள் தெரிவித்திருந்தார் “இலஞ்சம் 30,000.00 ரூபாவினை நீங்கள் பெற்றீர்கள் தானே என்று” அதன் போது ஆனந்தராஜ் உறுப்பினர் அவர்களும் அதே வார்த்தை பிரயோகத்தை பிரயோகித்திருந்தார். அது சபையை முடிக்கும் முன்னர் நடந்த விடயம் அது ஏன் சயைறிக்கையில் வரவில்லை? கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் அத்துமீறி கட்டப்படும் கட்டிடங்கள் தொடர்பான பிரேரணைக்கு வலு சேர்க்கும் முகமாக உப தவிசாளர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் தான், தான் இலஞ்சம் பெற்றுள்ளதாக கூறியுள்ளதாக கூறினார். அப்போது தாங்கள் 30,000.00 ரூபா பெற்றக்கொண்டது உண்மை தானே என கௌரவ உறுப்பினர் ஆனந்தராஜ் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். சாமிமலையில் நீங்கள் 30,000.00 ரூபா பெற்றது உண்மைதானே என்று தவிசாளர் அவர்கள் கூறியிருந்தார். எமது 16 உறுப்பினர்களை கொண்ட சபை ஒரு அத்திவாரம், நாம் அடுத்த சபைக்கு சிறப்பான ஒரு சபையாக இச்சபையினை வழங்க வேண்டும். சபைக்கென ஒரு கௌரவம் உள்ளது, இவ்வாறான நிகழ்வுகள் எமது அடுத்த சந்ததியினருக்கு பிழையான எடுத்து காட்டாக அமையும் தகாத வார்த்தை பிரயோகங்கள் கை கலப்பு போன்ற விடயங்கள் பிழையான பாதைக்கு இட்டுச்செல்லும், இங்கு கட்சி, இனம், மதம் என்பது இல்லை அனைவரும் ஒன்று தான். இந்த 05 வருடங்களில் மஸ்கெலியா பிரதேச மக்களுக்கு சிறந்த சபையினை வழங்க வேண்டும். இனி இவ்வாறான விடயங்கள் நடைபெற கூடாது. 10 வட்டாரங்களில் மக்கள் வாக்குகளை பெற்று வந்துள்ள நாம் மக்கள் பிரச்சினைக்காக தான் குரல் கொடுக்க வேண்டுமே தவிர இவ்வாறான விடயங்களில் ஈடுபடக்கூடாது. ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே மீண்டும் இவ்வாறான விடயம் நடைபெறாமல் இருக்கும் சபையில் நல்ல விடயங்களுக்கு ஆதரவு

வழங்கியிருக்கின்றோம். பிழையான விடயங்களை தட்டிக்கேட்டுள்ளோம். கௌரவ உறுப்பினர்களே தான் கட்டிடத்தை கட்டவும் சொல்கின்றார்கள் உடைக்கவும் சொல்கின்றார்கள் என்று தாங்கள் கூறினீர்கள், அந்த உறுப்பினர்கள் யாரென்று கூற வேண்டும். ஏனென்றால் அனைத்து உறுப்பினர்களும் அந்த குற்றசாட்டை எடுத்துக்கொண்டு செல்ல முடியாது. மக்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை உள்ளது. சில விடயங்கள் ஏன் அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டது? இவ்வாறான விடயங்கள் எப்படி மேலிடத்திற்கு செல்லும் சபையுடன் மூடி மறைக்கப்படும். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வறிக்கையை திருத்தி அடுத்த சபையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, பொலிசாலும், நீதிமன்றத்தாலும் வழக்கு தொடர்ந்து சென்றுக்கொண்டிருக்கின்றது. சபையில் நடந்த விடயங்களை ஆணையாளருக்கு கடிதம் மூலம் அனுப்பியிருக்கின்றோம். ஆணையாளர் விசாரணைக்கு இது தொடர்பாக திகதி ஒன்றை தருவார். மீண்டும் கூறுகின்றேன், அறிக்கையில் எவ்வித விடயங்களும் மறைக்கப்படவில்லை. சபை நேரத்தில் நடந்த விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சபை நிறைவுற்ற பின்னர் நடைபெற்ற விடயங்களை இணைக்க முடியாது.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே முதலில் கட்டிடங்களை கட்ட சொல்வதும் அதே உறுப்பினர் அதை உடைக்க சொல்வது ஒரு உறுப்பினர் என்று கூறியிருந்தீர்கள் அந்த உறுப்பினர் யாரென பெயர் குறிப்பிட வேண்டும். அன்றைய தினம் கைகலப்பு சம்பவம் நடைபெற காரணமாக அமைந்தது, அந்த கட்டிடம் சம்பந்தமான விடயம் தான். இங்குள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் தோட்டப்பகுதிகளை சேர்ந்தவர்கள், தோட்டப்புற அபிவிருத்திக்காக பேசுவதனை விட்டு விட்டு தனிப்பட்ட நபர்களின் கட்டிடங்கள் தொடர்பாக எல்லா சபைகளிலும் பேசுகின்றோம். இனிவரும் காலங்களில் இவற்றை விட்டு விட்டு நல்ல விடயங்களை கலந்துரையாடவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, இது தொடர்பான முழு விடயங்களையும் ஆணையாளருக்கு அனுப்பியுள்ளோம். அது தொடர்பான 03 கடிதங்கள் உள்ளது, இவற்றை ஆணையாளரினூடாக ஆளுனருக்கு கொண்டு சென்று சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த 13ம் திகதி நடைபெற்ற சம்பவத்திற்கு என்னை கை நீட்டி அவர் இலஞ்சம் பெற்றார் என நான் கூறியதாக அவருக்கு யார் கூறினார் என்பதனை இச்சபையிலே கூற வேண்டும்.

நான் இவ்விடயத்தில் விசேடமாக கூற விரும்புவது இவ்விடத்திற்கு வந்திருப்பது நான் மாத்திரம் ஒரு தனி உறுப்பினராகவே, எனது குடும்ப உறுப்பினர்களை நிறுவனத்திற்குள் எடுக்க மாட்டேன். கௌரவ உப தவிசாளர் அவர்கள் அன்று எனது தங்கையைப்பற்றி கதைத்தார். மிகவும் அவதூறாக தகாத வாரத்தைகளில் பேசி அதன் காரணமாக தான் நான் கண்ணாடிக்குவளையில் இருந்த நீரை எறிந்தேன். எனது தங்கை இறந்து தற்போது 15 வருடங்களாகின்றது. தற்போது அதனை பற்றி பேசுவது பொருத்தமில்லை தானே?

இச்சபைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டும் என்று நான் நினைத்ததில்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் சமனானவன், எனக்கு இழைக்கப்பட்ட விடயத்திற்கு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே, இதனை ஒரு சபையாக கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே இந்த இடத்திற்கு சொந்த பிரச்சினைகளை கொண்டு வரக்கூடாது. சபையின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப சபையை கொண்டு செல்லவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

வலுவூட்டல் வேலைத்திட்டம் தொடர்பாக நான் பிரேரணை கொண்டு வந்திருந்தேன். அந்த கடைக்கான பிரேரணையில் யார் யார் அக்கடைகளுக்கு விண்ணப்பித்திருந்தார்கள் என கேட்டிருந்தேன் ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது, சபைக்கு விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதென ஆனால் விபரங்கள் அறிக்கையில் இல்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்கள் விபரங்கள் கேட்டதற்கமைய செயலாளர் விபரங்களை சபையில் வாசித்தார், அதனால் தான் விபரஙகள் முன்வைக்கப்பட்டதென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இச்சபையில் கௌரவம் கௌரவம் என்று பேசுகின்றோம், ஆனால் இங்கு கௌரவமே இல்லை. இன்னொரு இடத்தில் எந்த அடிப்படையில் விடயங்கள் முன்னெடுக்க வேண்டுமோ அந்தடிப்படையில் தான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தாங்கள் கூறியுள்ளீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், டென்டர் நிபந்தனைகளின் அடிப்படையில் தான் செய்யப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

அதிகளவு தொகை கோருபவர்களுக்கு கடை வழங்கப்படுமென கூறப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அதிகளவு வைப்பு தொகை கோருபவர்களுக்கு தான் கடை வழங்கப்படுமென கடந்த சபையிலும் நான் கூறியுள்ளேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

ஆனால் விண்ணப்பப்படிவத்தில் கூடிய தொகை கோருபவருக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், கூடிய வைப்பு தொகை வைப்பவர்களுக்கு வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

அன்று சபையில் குறிப்பிட்ட விபரங்கள் வேறு அறிக்கையில் வேறு ஒரு ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

03 பேரின் பெயர் வாசிக்கப்பட்டது இங்கு 01 நபரின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை தான் நான் கேட்கின்றேன். தற்போது 04 வருடம் சபை நிறைவுற்றும் இன்றும் முன்பள்ளிக்கு செல்வது போல தான் உள்ளது. ஒவ்வொரு முறையும் அறிக்கை திருத்தங்களுடன் தான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் எழுத்து வடிவில் வழங்கும் பிரேரணைகளிலே ஏகப்பட்ட எழுத்துப்பிழைகள் உள்ளன. 16 உறுப்பினர்களும் பேசும் விடயங்கள் அனைத்தையும் தொகுத்து எழுதும் போது சில பிழைகள் ஏற்பட வாய்ப்புள்ளமையினால் தான் அறிக்கை திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சிலர் மாத்திரமே பிரேரணைகளை முழுமையான எழுத்து வடிவில் வழங்குகின்றனர்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, அன்றைய தினம் கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் அப்பிரச்சினையை உள்ளடக்கி ஒரு கடை தொடர்பில் தான் பெயர் பட்டியலை கேட்டார். பெயர் பட்டியல் யார் என்பதனையும், மூவரின் பெயர்களை குறிப்பிடுமாறு கேட்டார்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவருக்குக் கூறப்பட்டது, அது இதற்கு வரவில்லை என்று அவர்கள் கூறுகிறார்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கூறப்பட்டது. அது சரி அவர் கேட்பது அந்த 03 பெயர்களையும் குறிப்பிடுமாறு கேட்கின்றார். அது குறிப்பிடப்படவில்லை. சபையில் கதைத்தவுடன் தவிசாளர் பதில் கேட்கும் போது எவ்வாறு அது வராமல் இருக்கும். இதனை கோபத்தை ஏற்படுத்தி பிரச்சினையை ஏற்படுத்தும் அளவிற்கு கொண்டு சென்றால் நாங்கள் ஆயத்தமாக உள்ளோம். தாங்கள் முறைப்படி இதற்கான பதிலை தரவேண்டும். அவர் கேட்பது மூவரின் பெயர் என்னவென்று. நிஸ்ஸங்கவோ சஞ்சலாவோ ஏதோ ஒரு பெயர் . அதற்கு மேலதிகமாக 02 பெயர்களை கேட்டார். அப்போது 03 பெயர்கள் அந்த 03 பெயர்களும் இங்கே குறிப்பிடப்பட வேண்டும் அல்லவா? அது ஏன் குறிப்பிடப்படவில்லை. அதற்கான பொறுப்பை ஏற்றக்கொள்வது. முடியாது முடியாது என்று கூறாமல் தவிசாளர் அவர்களே, இவ்விடத்திலே ஏதோ தவறு நடந்திருக்கின்றது. அப்படியானால் அத்தவறுகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே யாரும் முடியாது என்று கூறவில்லை. தவறுகள் ஏற்படலாம் என்று தான் கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

அறிக்கையில் கடைகள் தொடர்பான விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மறைக்கவில்லை, வேண்டுமானால் அவற்றை இணைத்து திருத்தம் மேற்கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

நான் தகவல் அறியும் சட்டத்தில் கேட்கின்றேன், யார் யார் கடைக்கு விண்ணப்பித்திருந்தார்கள்? யாருக்கு கடை வழங்கப்பட்டுள்ளது? கடிதங்கள் வந்த திகதி தொடர்பான விபரங்கள் எனக்கு வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தகவல் அறியும் சட்டத்தில் நான் விபரங்களை தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இக்கடைகள் அமைக்கப்பட்டது ரிக்காடன் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தான் அமைக்கப்பட்டது. சபைக்கான மின்சார பட்டியலை வேறு யாரும் செலுத்தவில்லையென தாங்கள் கூறினீர்கள், அப்படியானால் கடைகளை அமைப்பதற்கான மின்சார பாவனை கட்டணம் எவ்வாறு செலுத்தப்பட்டது?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அது தொடர்பான விபரங்களை அடுத்த சபையில் தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இச்சபை அமைய காரணமாக இருந்த, அமரத்துவம் அடைந்த கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் இருந்திருந்தால், இன்று இந்த தவறிழைத்தவர்கள், தவிசாளர் உட்பட யாரும் இந்த சபையில் இருந்திருக்க மாட்டார்கள், இவ்வாறான பிழைகளை செய்தவர்களை அவர் வைத்திருக்க மாட்டார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பில் நானும் உறுப்பினராக இருந்துள்ளேன். அந்த உயர்ந்த மனிதர் தற்போது இருந்தால் இவ்வாறான பிழைகள் ஏற்படாது. கடந்த சபையில் பிரச்சினை ஏற்பட்டதன் பின் காயம் பட்டவர் கிராமிய வைத்தியசாலையிலும் வாய் தகராறில் ஈடுபட்டவர் தவிசாளரினூடாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். சபை நடைபெறும் வேளையில் ஆசனத்தில் இருந்து தவிசாளர் இறங்கி வந்தது கண்டிக்கதக்க விடயம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையயை முடித்து விட்டு தான் இறங்கினேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இன்று கூட பாதுகாப்பு கடமைக்காக யாரையாவது நியமித்துள்ளீர்களா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

யாரும் இங்கு குழந்தைகள் இல்லை, சபையை மீறி செயற்பட முடியாது.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

உள்ளூராட்சி துணை ஆணையாளர் ஊடாக இந்த அறிக்கையும் அன்று நடைபெற்ற விடயங்களையும் உறுப்பினர்களையும் வைத்து விசாரணை ஒன்றை செய்ய வேண்டும். இவ்வாறான விடயம் யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படலாம். சபை ஆரம்பித்து 04 வருடங்களிலும் இதை தான் செய்தோம். மீதமுள்ள 01 வருடத்தையாவது சரியாக கொண்டு செல்ல வேண்டும். நம்பிக்கையை இழந்த நிலையில் தான் உள்ளோம். ஒரு சில இடங்களில் தவிசாளர் கடமையை செய்ய தவறியுள்ளீர்கள் இவ்விடயங்களை உதவி துணை ஆணையாளரின் நேரடி கண்காணிப்புக்கு கொண்டு செல்ல வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, நான் எனது கடமைகளை சரியாக தான் செய்கின்றேன். கடமையை தவறியதில்லை. இங்குள்ள அனைவரும் மக்கள் வாக்குகளை பெற்று வந்தவர்கள் அவரவர்கள் தாங்களை திருத்திக்கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்கள் உறுப்பினர்கள் யாரும் சபை அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை இதற்காக கையுயர்த்தி எங்களின் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

சபை அறிக்கை தொடர்பான பல வாத விவாதங்கள் கொண்டு செல்லப்படுகின்றது. கடந்த சபைக்கு நான் வருகை தராவிட்டாலும் கூட இங்கு குறிப்பிடப்படும் விடயங்களில் இருந்து என்ன நடந்ததென விளங்குகின்றது. கௌரவ உறுப்பினர் கூறுவது சரி சபை முன்னோக்கி செல்வதை விட தற்போது பின்நோக்கி தான் சென்றுக்கொண்டுள்ளது, எனவே சபையறிக்கை சரியா பிழையா என வாக்கெடுப்பிற்கு செல்லவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபை அறிக்கையை ஏற்றக்கொள்பவர்கள் கையுயர்த்துங்கள்.

**2021.12.13 சபை அறிக்கையை ஆதரித்தோர் விபரம்.**

01. கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள்
02. கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள்
03. கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள்
04. கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள்
05. கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார்அவர்கள்
06. கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள்
07. கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள்
08. கௌரவ உறுப்பினர் K.L.A.ரஞ்சனி அவர்கள்
09. கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள்

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஏற்கனவே உள்ளூராட்சி துணை ஆணையாளர் இங்கு வந்து செயலமர்வு செய்யும் போது கையுயர்த்தி வாக்கெடுப்பு செய்ய முடியாதென கூறியுள்ளார். ஒவ்வொருவராக தான் கேட்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அப்படியானால் மீண்டும் ஒவ்வொருவராக கேட்போம்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

மீண்டும் கேட்க முடியாது, வாக்கெடுப்புக்கென ஒரு விதிமுறை உள்ளது தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவர்கள் ஆதரித்து தானே கூறியுள்ளனர்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

இந்த வாக்கெடுப்பு தேவையில்லை. இந்த சபைக்குள்ளே ஜனநாயகம் இல்லை. ஜனநாயகத்திற்கு முன்னுரிமை கொடுங்கள். வாக்கெடுப்பு நடத்துவது என்றால் ஒவ்வொருவரின் பெயர்களையும் குறிப்பிட்ட பின்னர்தான் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். பொதுவாக எவ்வாறு கைகளை உயர்த்த சொல்ல முடியும். இது தான் ஜனநாயகமா? யார் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வது. இவ்விடத்தில் ஜனநாயகம் காட்டப்படவில்லை என்றால் சபை அறிக்கையிலே எவ்வாறு ஜனநாயம் காணப்படும். அன்றைய தினம் பிரச்சினை ஒன்று உருவெடுத்து காயங்கள் ஏற்பட்டு நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதும் இதனால் தான் . செய்வதென்றால் சரியாக செய்யுங்கள். தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டு செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையறிக்கைக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் ஒவ்வொருவராக எழுந்து தமது ஆதரவை தெரிவிக்கவும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையில் அத்துமீறிய கட்டிடம் தொடர்பாக பேசப்பட்டது. இச்சபையில் நான் ஒரு நேர்மையானவன், குண்டுசி அளவு கூட சபை நிதியினை நான் வீண் விரயப்படுத்தியதும் அல்ல, குண்டுசி அளவு கூட இலஞ்சம் பெற்றதும் இல்லை. இவ்விடயம் அனைத்து உறுப்பினர்களையும் கலங்கப்படுத்துகின்றது. ஒரு உறுப்பினர் குற்றம் செய்யாமலே 02 நாள் சிறையில் இருந்துள்ளார். இலஞ்சம் பெற்றவர்களின் விபரங்களை ஆளுனருக்கு அனுப்புவதாக தவிசாளர் கூறினீர்கள். அடுத்த சபையில் அவர்களின் பெயர்கள் முன்வைக்கப்பட வேண்டும். தண்டனைகள் பெற்றக்கொடுக்க வேண்டும். கடந்த மாத சபையறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாதம் நடந்த சம்பவங்களை நாம் கண்கூடாகக் கண்டோம். ஏனென்றால், அதைபற்றி நினைத்து இது பிழை பிழை என்று கூறினாலும் சபையை நடத்தி செல்வதற்கான காலம் போதவில்லை. அந்த

சந்தர்ப்பத்திலே எமது கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கும் கௌரவ உறுப்பினர்களுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டு தவிசாளரினால் சபையை இடைநிறுத்த வேண்டி வந்தது. அதனால் அதன் முழு விபரங்களும் சுருக்கமாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதற்காக எனது அன்பையும் கருணையினையும் வெளிப்படுத்துவதாக கைகளை உயர்த்தி கூறுகின்றேன்.

**2021.12.13 சபை அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தோர் விபரம்.**

01. கௌரவ உப தலைவர் P.P.பிரதீபன் அவர்கள்
02. கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள்
03.கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள்
04.கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள்
05.கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள்
06. கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள்
07. கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள்

**தீர்மான இல 01**

2021.12.13ம் திகதி சபையமர்வு அறிக்கை மேலதிக 02 வாக்குகளின் மூலம் 2022.01.12 சபையமர்வின் போது நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

எனது விசேட உரையிலே, 2022ம் ஆண்டிற்கான வட்டார உறுப்பினர்களுக்கு கௌரவ நிதி அமைச்சரினூடாக 40 இலட்சம் பெறுமதியான வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. இதற்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு அந்த வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கிய கடிதங்கள் மீண்டும் திருப்பி அனுப்பபட்டுள்ளது. மாவட்ட செயலகத்தில் குறிப்பிட்டப்படி அவற்றை திருத்தி அனுப்ப வேண்டும். இவ்வேலையில் சபையின் சார்பாகவும், கௌரவ உறுப்பினர்கள் சார்பாகவும் நிதி அமைச்சருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைபாடுகளை சமர்ப்பிக்கவும்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - வருமான பரிசோதகர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - பிரவுன்லோ தோட்ட பகுதிக்கான வரிபணம் அறவிடுதல் தொடர்பாக கடந்த சபையில் கேட்கப்பட்ட விபரம் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் நான் தான் இவ்விபரங்களை கேட்டிருந்தேன், அவ்வாறென்றால் ஏற்கனவே அறவிடப்பட்ட பணத்தை மீண்டும் அம்மக்களுக்கே பெற்றுத்தர முடியுமா என தேடிபார்க்கவும் இல்லாவிட்டால் மீண்டும் தொடர்ந்து அவர்களிடம் வரி அறவிட நடவடிக்கை எடுக்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அம்பகமுவ பிரதேச சபைக்கு கடிதமனுப்பி கேட்போம்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - வருமான பரிசோதகர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2022ம் ஆண்டுக்கான வரி அறவிடல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

2022ம் ஆண்டுக்கான வரி அறவீடுகளை மேற்கொள்ள எனது பூரண ஆதரவை வழங்குகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையிலும் இவ்விடயம் முன்வைக்கபட்டு அனுமதி வழங்கப்படவில்லை வர்த்தமானி செய்ய அனுமதி வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

வரி அறவிட அனுமதியினை வழங்கலாம், ஆனால் காலத்திற்கேற்ப வரி தொகை அதிகரிக்கப்பட வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வரி அறவீடுகளை அதிகரிப்பது தொடர்பாக கேட்கவில்லை, 2022ம் ஆண்டுக்கான வரி அறவீடுகளை அறவிடவும் வர்த்தமானியில் பிரசுரிக்கவும் தான் அனுமதி கேட்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

வரி கட்டாயம் அறவிடப்பட வேண்டும், அறவிடப்பட்டால் மாத்திரமே சபையினை கொண்டு நடந்த முடியும். அதற்கு எதிர்பை தெரிவித்தால் சபையை கொண்டு நடந்த ஆதரவினை வழங்கவில்லை என்பது தான் அரத்தம் என்னை பொருத்தவரைவில் வரி அறவிடப்பட வேண்டும். அப்போது தான் வட்டார அபிவிருத்திப் பணிகளை செய்ய முடியும். எனவே இதற்கு எனது ஆதரவை வழங்குகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

2022ம் ஆண்டு வரி அறவிட எனது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

2022ம் ஆண்டு வரி அறவிட எனது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளரிடம் வினா ஒன்றை முன்வைக்கின்றேன், சபை ஆரம்பித்த கால கட்டத்தில் கோழிக்கடைகள் மூலமாக சபைக்கு வந்த வருமானம் எவ்வளவு தற்போது வரும் வருமானம் எவ்வளவு?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இதனை கேள்வியாக முன்வையுங்கள் நான் அடுத்த சபையில் பதில் அளிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இலாபமா அல்லது நட்டமா என மட்டும் கூறுங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கட்டாயம் நட்டம் தான்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

யார் இதற்கு காரணம்? எமது உறுப்பினர்கள் தான். ஏற்கனவே சபையை நட்டப்படுத்தியது போல தற்போது வரிபணம் அறவிடுவதிலும் செய்கின்றார்கள் கட்டாயம் வரிபணம் அறவிடப்பட்டால் மாத்திரமே சபையை கொண்டு நடத்த முடியும்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே குடா மஸ்கெலியா பிரதேசத்தில் பாரிய பிரச்சினை உள்ளது. வாகன திருத்தும் நிலையங்கள் உள்ளன. வீடுகள் உள்ளன. அவற்றினால் சபைக்கு பாரிய வருமானம் ஒன்றை

பெற்றுக்கொள்ள முடியும். எனவே தான் அதைபற்றி கதைத்தேன். புதிதாக ஏதாவது செய்து அதனை நடைமுறைப்படுத்துங்கள்.

**கௌரவ உறுப்பினர் K.L.A.ரஞ்சனி அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, வரி அறவீடு செய்வதற்கு நான் விருப்பத்தை தெரிவிக்கின்றேன். அதனால் சபைக்கு வருமானம் கிடைக்கும்.

**கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள் (ஐ.ம.சு.மு)**

வரிபணம் அறவிட எனது ஆதரவை தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

இவ்விடயத்திற்கு எனது ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்விடயம் அவசியமென்பதான இவ்விடயத்திற்கு எனது ஆதரவை தெரிவிக்கின்றேன்.

**2022ம் ஆண்டுக்கான வரி அறவீடுகளை அறவிடுதல் தொடர்பான விடயம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.**

**<u>ஆதரவு தெரிவித்தோர்</u>**

01. கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள்
02.கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள்
03. கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள்
04. கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள்
05. கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள்
06. கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார்அவர்கள்
07. கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள்
08. கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள்
09. கௌரவ உறுப்பினர் K.L.A.ரஞ்சனி அவர்கள்
10. கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள்

**<u>எதிர்ப்பு தெரிவித்தோர்</u>**

01. கௌரவ உப தலைவர் P.P.பிரதீபன் அவர்கள்
02. கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள்
03.கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள்
04.கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள்
05 கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள்
06 கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள்

**தீர்மான இல 02**

2022ம் ஆண்டுக்கான வரி அறவீடுகளை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் வரி அறீடுகளை மேற்கொள்வது தொடர்பான விடயத்திற்கான சபை அனுமதி மேலதிக 04 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

**கடித இல 03**

**அனுப்புனர்** - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சு.

**விடயம்** - மஸ்கெலியா பிரதேச சபையின் அலுவலக கட்டிடம் தொடர்பான கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2021 ஒக்டோபர் மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2021 நவம்பர் மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கடித இல 06**

**அனுப்புனர்** - 02ம் வீதி குடியிருப்பாளர்கள் - மஸ்கெலியா

**விடயம்** - வடிகாண் ஒன்றினை அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம்.

**கடித இல 07**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2022ம் ஆண்டுக்கான சபையமர்வுகளை நடத்துதல் மற்றும் சபையமர்விற்கான கால அட்டவணையை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**2022ம் ஆண்டுக்கான சபையமர்வு கால அட்டவணை**

1. ஜனவரி - 12
2. பெப்ரவரி - 11
3. மார்ச் - 14
4. ஏப்ரல் - 11
5. மே - 13
6. ஜுன் - 13
7. ஜுலை - 12
8. ஒகஸ்ட் - 12
9. செப்டம்பர் - 12
10. ஒக்டோபர் - 12
11. நவம்பர் - 14
12. டிசம்பர் - 12

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையறிக்கை, சபை நடவடிக்கை தொடர்பாக ஆணையாளர் அவர்கள் நன்கு அவதானித்துள்ளார். ஆனால் எங்களுக்கு சபையறிக்கைகள் எத்தனை தினங்களுக்கு முன் கிடைக்கப்பெறுகின்றதென்பதனையும் தேடிபார்க்க வேண்டும். 01 கிழமைக்கு முன் எங்களுக்கு கிடைக்க வேண்டும். இம்முறை 03 நாட்களுக்கு முன் தான் எங்களுக்கு கிடைத்தது. பதிவு தபாலில் அனுப்பி வைக்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

பிரேரணைகளை எழுத்து வடிவில் கொடுத்தால் அறிக்கையை விரைவில் வழங்கலாம்.

**கடித இல 08**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - கொவிட் - 19 தொற்று ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக சபையினூடாக செலுத்தப்பட்ட செலவுகள் தொடர்பான கடிதம்.

**கடித இல 09**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி.

**விடயம்** - 2021.12.13ம் திகதி சபையமர்வின் போது நடைபெற்ற சம்பவம் தொடர்பான கடிதம்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

சபையினூடாக இக்கடிதத்தை அனுப்பி வைத்தமைக்கு நன்றி, எனக்கு ஆனந்தராஜ் அவர்களுக்கும் வாய்தர்க்கம் ஏற்பட்டது. பலமுறை இவ்வாறு நடைபெற்றுள்ளது. பின்னர் நாங்கள் சமாதானமும் அடைந்துள்ளோம். குறித்த வேளையில் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்களுடன் நான் எந்த வாய்தர்க்கத்திலும் ஈடுபடவும் இல்லை, அவரைபற்றி பேசவும் இல்லை. ஆனால் இக்கடிதத்தில் வாய்தர்க்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பிழையான விடயம். எனக்கும் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்களுக்கும் இடையில் வாய்தர்க்கம் ஏற்படவில்லை. கடிதம் பிழை கடிதத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் ஏனைய விடயங்கள் சரி.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே கடிதம் அனுப்பிவிட்டீர்கள் தானே? அனுப்பிய கடிதத்தில் எவ்வாறு திருத்தம் கொண்டு வருவீர்கள்? இக்கடித்தில் பிழை உள்ளதெனவும் உண்மை சம்பவங்களை குறிப்பிட்டு உப தவிசாளர் அவர்கள் தான் கடிதமனுப்ப வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சம்பந்தப்பட்ட உப தவிசாளர் சம்பந்தப்பட்ட உறுப்பினருடன் சமாதானமாகிவிடுவோம், சகஜம் என கூறுகின்றார், எனவே உப தவிசாளரே கடிதமனுப்பப்பட்டும்.

**கடித இல 10**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2021.12.13ம் திகதி சபையமர்வின் போது நடைபெற்ற சம்பவம் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கமைய ஒழுக்காற்று நடவடிக்கைக்கு செல்ல வேண்டும். இக்கடிதத்திற்கும், சபை அறிக்கைக்கும் இடையில் வித்தியாசமுள்ளது. ஆளுனரின் கவனத்திற்கு கொண்டு செல்லம் போது சபையறிக்கை பொருத்தமானதாக இருக்காது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது தொடர்பாக நானும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கடிதமொன்றை வழங்கியுள்ளேன், அதனையும் ஆளுனருக்கு அனுப்பவும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கடிதமும், அறிக்கையும் ஒரே மாதிரியாக இருந்திருந்தால் பரவாயில்லை, அறிக்கையை தயாரிக்கும் முழு பொறுப்பு செயலாளருக்கு உள்ளது. பிழைகள் காணப்படும் என்பதனை நாங்கள் சுட்டிக்காட்டினால் அதனை திருத்தியமைக்க வேண்டிய பொறுப்பு செயலாளருடையது. கடிதம் சரியாக உள்ளது.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

நானும் பொலிஸ் முறைப்பாட்டு பிரதியை எடுத்துவிட்டேன், நீதிமன்ற வழக்கு தாக்கல் செய்ய அனைத்து தகவல்களையும் திரட்டி விட்டேன். 12இலட்சத்து 50ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வியாழக்கிழமை நீதிமன்றத்திற்கு செல்லவுள்ளேன். சபையில் நடவடிக்கை எடுக்காவிட்டால் மேலதிக நடவடிக்கை எடுக்க எல்லா விடயங்களையும் நான் செய்துவிட்டேன்.

**கடித இல 11**

**அனுப்புனர்** - பிரதேச செயலகம் - அம்பகமுவ கோரளை.

**விடயம்** - கௌரவ உறுப்பினர்களுக்கான 40 இலட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டம் தொடர்பான கடிதம்.

**கடித இல 12**

**அனுப்புனர்** - விடயப் பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2022ம் ஆண்டுக்கான மஸ்கெலியா பிரதேச சபையின் செயற்றிட்ட அறிக்கை தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 03**

2022ம் ஆண்டுக்கான மஸ்கெலியா பிரதேச சபையின் செயற்றிட்ட அறிக்கைக்கு சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நல்லதண்ணி உப காரியாலயத்திற்கு அதிகளவு மின்சார பட்டியல் செலுத்தப்பட்டுள்ளது ஏன்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கழிவு நீர் சுத்திகரிப்பிற்காக (Treatment Plant Unit) அதிகளவு மின்சாரம் செல்கின்றது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபைக்கு பின் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது, அதற்கு சபை அனுமதி எடுக்கப்பட்டுள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், சபை அனுமதி எடுக்கப்பட்டுள்ளது, கௌரவ ஆளுனரின் கீழ் வந்த வேலைத்திட்டத்தினூடாக செய்யப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையிலே வீதி மின்விளக்குகள் தொடர்பாக சிபாரிசொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. பராமரிப்பு நடவடிக்கைகளை கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்க சிபாரிசு மேற்கொள்ளப்பட்டுள்ளது, இது எவ்வாறு?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையினூடாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களினூடாக அமைச்சினூடாகவும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. அவ்வாறு போட்ட மின்விளக்குகளை கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு பொறுப்பு

கொடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மீண்டும் மீண்டும் அவை பழுதாகுவதனால் சங்கங்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மின்விளக்குகளை திருத்துவது சபையின் கடமை தானே? இவ்வாறு சிபாரிசு செய்வது எவ்வளவு சாத்தியப்படும் என்று தெரியவில்லை கழிவகற்றலை நாம் தோட்ட நிர்வாகத்திற்கு கொடுக்க முடியாது தானே? அதே போல மின்விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பை கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்க முடியாது. பின்னர் பிரச்சினை ஏற்படும். சபைக்கு கீழ் உள்ளது தான் பொருத்தமானதாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தோட்டப்புறங்களுக்கு பிரதேச சபையினூடாக வேலை செய்ய முடியுமென திருத்தம் கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட இவ்வாறான விடயங்களினால் நாம் பின்னோக்கி தான் சென்றுக்கொண்டிருக்கின்றோம். சபையினூடாக போடப்பட்ட வீதி மின்விளக்குகளை சபையினூடாக பராமரிப்பது தான் சரியாக இருக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையினூடாக போடப்பட்ட வீதி மின்விளக்குகளை சபை பராமரிக்கலாம், அமைச்சினூடாக போடப்பட்டது உள்ளடங்கலாக அனைத்தையும் பராமரிப்பது கடினம். மின்சார சபையிலும் இது தொடர்பாக பிரச்சினை உள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வீதி விளக்குகளை சபையினூடாக தான் பராமரிக்க வேண்டும். மின்குமிழ் பழுதாகிவிட்டதென மின்குமிழ்களை வழங்கிய அமைச்சரிடம் கேட்க முடியாது தானே? செயலாளர் தலைமையில் சபை செல்லும் போது இவ்விடயம் பிரச்சினைகளை ஏற்படுத்தும் சங்கங்களுக்கு வழங்குவது பொருத்தமில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபை தான் தொடர்ந்து பராமரிக்க வேண்டுமானால் அதற்கும் சபை அனுமதி வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் கட்டாயமாக சபையினூடாக தான் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபை காலம் நிறைவடைந்ததும் செயலாளரின் கீழ் சபை இயங்கும் போது எந்த அனுமதியின் கீழ் மின்விளக்குகள் வாங்கினீர்கள் என்று கேட்கப்படும் தானே?

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பிரதேச சபை நிதி பயன்படுத்தப்பட்டிருந்தாலே அது சபைக்கு கீழுள்ள விடயம் தானே? அதற்கு ஏன் திருப்பி அனுமதி பெற வேண்டும்.

(இவ்வியடம் தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது)

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தோட்ட நிர்வாகம் ஏக்கர் வரி கட்டினால் தனிப்பட்ட நபர் வரி கட்ட தேவையில்லை என கடிதப்பகுதியில் குறிப்பிடப்பட்டது. எல்லா தோட்டங்களிலும் ஏக்கர் வரி கட்டப்படுகின்றதா இல்லையா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கட்டப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தோட்ட நிர்வாகம் ஏக்கர் வரி சிறிய தொகையை கட்டிவிட்டு தோட்டங்களுக்கு கிடைக்கும் நன்மைகளை தவிர்ப்பதனை விட தோட்ட நிர்வாகம் ஏக்கர் வரியினை கட்டாமால் இருப்பது நல்லது. தனிப்பட்ட மக்கள் வரியை கட்டட்டும் அப்போது அவர்களுக்கு சேவையை பெற்றுக்கொள்ளலாம் தானே? இல்லாவிட்டால் தோட்ட நிர்வாகம் வரி கட்டுவதனால் எங்களுக்கு வீதி விளக்குகளை பெற்றுதாருங்கள் என எம்மிடம் கேட்கலாம். எனவே இவ்விடயத்தை சற்று கவனத்திற்கெடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

மாட்டிறைச்சி கடையை நாம் திருத்துவதற்கான உத்தேச மதிப்பீடு நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மாட்டிறைச்சி கடையை நாம் திருத்தி கொடுக்கவில்லை என்று தான் இம்முறை முதற்தடவையில் அவர்கள் டென்டர் எடுக்கவில்லையென அவர்கள் கூறியுள்ளனர். நாம் கட்டாயம் அதனை செய்து வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

சபைக்கான கட்டிடம் தொடர்பாக கடிதமொன்று சற்று முன் முன்வைக்கப்பட்டது. அக்கட்டிடம் அங்கு அமைக்கப்படும் போது மாட்டிறைச்சி கடை அகற்றப்படுமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அகற்றப்படும், சந்தைக்கட்டிடம் அமைக்கப்பட்டதும், அங்கு மாட்டிறைச்சி கடைக்கான இடம் வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இம்முறை டென்டரில் போது பல்வேறு சிக்கல் ஏற்பட்டுள்ளது. விபரங்கள் வெளியில் சென்றுள்ளன, எனவே இனிவருங்காலங்களில் சரி இவற்றை கவனத்திற்கொண்டு சரியான விடயங்களை முன்னெடுக்கவும்.

(இவ்வருடத்திற்கான டென்டர் நிகழ்வு தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.)

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மாட்டிறைச்சி கடைக்கான உத்தேச விலை மதிப்பீடு அதிகமாகவுள்ளது, புதிய சபை கட்டிடம் அமைக்கப்பட்டதும் இறைச்சி கடையை உடைக்க தான் போகின்றோம். எனவே வேறொரு இடத்திற்காவது கடையை மாற்றவும், இல்லாவிட்டால் ஏதாவது மாற்றம் மேற்கொள்ளவும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

மாட்றைச்சி கடையை புதுப்பிப்பதனை விட ஏற்கனவே நான் கூறிய இடத்தில் மாட்டிறைச்சி கடையினையும், ஆட்டிறைச்சி கடையினை அமைக்கலாம் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவ்வாறு செய்வதென்றால் இதனை விட இலட்சக்கணக்கில் அதிகளவு செலவழிக்க வேண்டும். சந்தை கட்டிடமும் அமைக்கப்படவிருப்பதனால் அங்கு மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி கடைக்கான இடம் ஒதுக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சற்று முன்னர் தான் சபை காரியாலயம் தொடர்பாக பேசப்பட்டது. செயலாளரின் அவதானிப்புக்காக தான் இராஜாங்க அமைச்சர் கடிதமனுப்பியுள்ளார். அதற்கு நிதி ஒதுக்கி வேலைகள் செய்து முடிக்கப்படும் முன் பெரும்பாலும் சபையின் காலமும் நிறைவுற வாய்ப்புள்ளது. முழுமையாக இதனை புதுப்பிப்பதாக இருந்தால் கட்டிடத்தை உடைக்காமல் இருக்க வேண்டும். கட்டிடம் உடைக்கப்படுமாயின் முழுமையாக புதுப்பித்தல் நடவடிக்கை செய்யாமல் மாற்று வழிக்கு செல்ல வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவர்கள் எமக்கு பாரியளவு டென்டர் தொகையினை கட்டுகின்றனர். எனவே இத்திருத்தங்களை கட்டாயம் நாம் செய்துக்கொடுக்க தான் வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அதனை திருத்திக்கொடுக்கின்றோம் என்பதற்காக மக்களுக்கு இறைச்சியை அவர்கள் மலிவாக வழங்கப்போவது இல்லை. இவ்வருடம் அதிகளவு தொகை பெறப்பட்டிருந்தால் ஏதாவது மாற்றுவழிக்கு செல்லவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இறைச்சி கடையில் இருக்கும் நபரிடம் முதலில் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்ற கூற வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பாடசாலை மாணவர்கள் அவ்வழியே செல்வதனால் கடையில் மறைப்பொன்றை போடுமாறு ஏற்கனவே நான் கூறியிருந்தேன். அத்துடன் டென்டர் தொகை அதிகரித்தால் இறைச்சி விலையும் அதிகரிக்கும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**2022.01.07ம் திகதி நிதிக்குழு அறிக்கை சிபாரிசுகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டது.**

**விடய இல 01**
RD – 1231 இலக்க டிரக்டர் வாகனத்தில் டிரக்டர் சேர்விஸ், டிரக்டர் டெயிலர் வெல்டிங், டெயிலர் பெயின்டிங் ஆகிய விடயங்களை மேற்கொள்ள அனுமதி கோரி முன்வைக்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல 04**
மேற்குறிப்பிட்ட கடிதத்தில் உள்ள விடயங்களை மேற்கொள்ளவதற்கான விலைமனு கோருவதற்கு நிதிக்குழு சிபாரிசினை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 02**
மஸ்கெலியா மாட்டிறைச்சி கடையினை திருத்துவதற்கான உத்தேச மதிப்பீடு நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது. (152767.62)

**தீர்மான இல 05**
மஸ்கெலியா மாட்டிறைச்சி கடையினை திருத்துவதற்கு சபை அனுமதி வழங்கியதுடன் இவ்விடயத்திற்கு கௌர உறுப்பினர் கே.சுரேஸ்குமார் அவர்கள் மாத்திரம் தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

**விடய இல 03**
ZB – 0394 இலக்கமுடைய கம்பெக்டர் வாகனத்திற்கு Battery மற்றும் Tyre என்பவற்றை கொள்வனவு செய்ய நிதிக்குழுவிற்கு கடிதம் முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 06**

மேற்குறிப்பிட்ட கடிதத்திற்கு அமைவாக முதலில் இவ்விடயத்தை தொழிநுட்ப குழுவிற்கு முன்வைத்து அதன் பின்னர் Battery மற்றும் Tyre என்பவற்றை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

**விடய இல 04**
2021ம் ஆண்டு கொவிட் - 19 காரணமாக டென்டர்தாரர்களுக்கு சலுகை வழங்குதல் தொடர்பாக விடயப்பொறுப்பாளரினால் முன்வைக்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 07**
மேற்குறித்த கடிதத்திற்கு அமைவாக சலுகையினை பெற்றுக்கொடுப்பதற்காக கௌரவ ஆளுனரின் அனுமதியினை பெற்றுக்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
Computer மற்றும் Printer இயந்திரமொன்றை வேண்டி முகாமைத்துவ சேவை அதிகாரி ஆர்.சனுக்ஷியா அவர்களினால் முன்வைக்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 08**
மேற்குறித்த கடிதத்திற்கு அமைவாக அவ்வியந்திரங்களை பெற்றுக்கொடுக்க விலைமனு கோருவதற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 06**
அலுவலகத்திலுள்ள அனைத்து பதவி முத்திரைகளும் பழுதடைந்துள்ளமையினால் புதிதாக அவற்றை தயாரித்து பெறுவது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 09**
மேற்குறிப்பிட்ட பதவி முத்திரைகளை அச்சிட்டு பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 07**
பிரதேச சபையின் பெயர்பலகைகளை பெற்றுக்கொள்வது தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
பெயர்பலகைகளை பெற்றுக்கொள்ள விலைமனு கோருவதற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 08**
மஸ்கெலியா பொது நூலகம் மற்றும் சாமிமலை வாசிகசாலைக்கு பத்திரிகை கொள்வனவு செய்வது தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 11**
பத்திரிகைகளை கொள்வனவு செய்ய விலைமனு கோருவதற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 09**
கடந்த சபையமர்வின் போது கேட்கப்பட்ட டென்டர் விபரங்கள் தொடர்பான விபரங்கள் கலந்துரையாடப்பட்டு செயலாளரினால் அவ்விபரங்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**விடய இல 10**
தற்போது Woship Project இன் ஊடாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்ற மகரதோரண மலசலகூடத்தொகுதியினை குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனத்திற்கு வழங்குதல் தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 12**

மேற்குறிப்பிட்ட மலசலகூடத்தினை புனர்நிர்மாணம் செய்ததன் பின்னர் கடந்த முறை போலவே கடைசியாக எடுக்கப்பட்ட டென்டர் தொகையினை பெற்றுக்கொண்டு மலசலகூடத்தை குத்தகைக்கு வழங்கவும் கம்பனியினூடாக மக்களுக்கு இலவச சேவையினை பெற்றுக்கொடுக்கவும் சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக 2022ம் ஆண்டுக்கான குழு உறுப்பினர்களை நியமித்தல்.

2022ம் ஆண்டுக்கான குழுக்களை நியமிக்கும் போது பின்வரும் உறுப்பினர்களால் தங்களை எக்குழுவிலும் இணைத்துக்கொள்ள வேண்டாமென கருத்து தெரிவிக்கப்பட்டது.

01. கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள்
02. கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள்
03. கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள்

04. கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள்
05. கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள்
06. கௌரவ உறுப்பினர் S..சுப்பிரமணியம் அவர்கள்
07. கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள்

**நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழு**

| இல | கௌரவ உறுப்பினர் | முன்மொழிந்த கௌரவ உறுப்பினர் | வழிமொழிந்த கௌரவ உறுப்பினர் |
|---|---|---|---|
| 01 | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | பி.ஆனந்தராஜ் அவர்கள் | கே.ஜி.கே.பெரேரா அவர்கள் |
| 02 | டி.வசந்தகுமார் அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் |
| 03 | கே.யோகேந்திரன் அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் | டி.வசந்தகுமார் அவர்கள் |
| 04 | எஸ்.ஏ.திஸாநாயக்க அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் | டி.வசந்தகுமார் அவர்கள் |
| 05 | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் | எஸ்.ஏ.திஸாநாயக்க அவர்கள் | டி.வசந்தகுமார் அவர்கள் |
| 06 | பி.ஆனந்தராஜ் அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் |
| 07 | கே.நித்தியானந்தன் அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் |

**வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு**

| இல | கௌரவ உறுப்பினர் | முன்மொழிந்த கௌரவ உறுப்பினர் | வழிமொழிந்த கௌரவ உறுப்பினர் |
|---|---|---|---|
| 01 | கே.ஜீ.கே.பெரேரா அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் |
| 02 | டி.வசந்தகுமார் அவர்கள் | பி.ஆனந்தராஜ் அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் |
| 03 | எஸ்ஏ.திஸாநாயக்க அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் |
| 04 | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் | கே.ஜி.கே.பெரேரா அவர்கள் |
| 05 | கே.யோகேந்திரன் அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் | கே.ஜி.கே.பெரேரா அவர்கள் |

**தொழிநுட்ப சேவைகள் குழு**

| இல | கௌரவ உறுப்பினர் | முன்மொழிந்த கௌரவ உறுப்பினர் | வழிமொழிந்த கௌரவ உறுப்பினர் |
|---|---|---|---|
| 01 | எஸ்ஏ.திஸாநாயக்க அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் |
| 02 | கே.ஜீ.கே.பெரேரா அவர்கள் | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் | கே.யோகேந்திரன் அவர்கள் |
| 03 | கே.யோகேந்திரன் அவர்கள் | கே.ஜீ.கே.பெரேரா அவர்கள் | எஸ்ஏ.திஸாநாயக்க அவர்கள் |

**சுற்றாடலும் வாழ்வசதிகள் குழு**

| இல | கௌரவ உறுப்பினர் | முன்மொழிந்த கௌரவ உறுப்பினர் | வழிமொழிந்த கௌரவ உறுப்பினர |
|---|---|---|---|
| 01. | கே.நித்தியானந்தன் அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் | பி.ஆனந்தராஜ் அவர்கள் |
| 02. | கே.ஜீ.கே.பெரேரா அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் | எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் |
| 03. | கே.யோகேந்திரன் அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் | டி.வசந்தகுமார் அவர்கள் |
| 04. | கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள் | கே.நித்தியானந்தன் அவர்கள் | கே.யோகேந்திரன் அவர்கள் |

**குறிப்பு – மேற்படி குழுக்கள் அனைத்திலும் கௌரவ தவிசாளர் அவர்கள் குழுவின் தலைவராக செயற்படுவார்.**

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே நான் பிரேரணை வழங்கியிருந்தேன். அது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, தாங்கள் 07ம் திகதி பிரேரணை வழங்கியிருந்தீர்கள், கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் 06ம் திகதி பிரேரணை வழங்கியிருந்தார் கால அவகாசம் இன்மையினால் அவற்றை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சரி கௌரவ தவிசாளர் அவர்களே, அப்படியென்றால் எனக்கு அறிவித்தல் தரப்படவில்லையே? எனக்கு அறிவித்தல் வழங்கப்பட வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

07 நாட்களுக்கு முன் தாங்கள் வழங்கவில்லை அத்துடன் அதற்கு முன்னர் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டும் விட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் என்னிடம் பிரேரணையை வாங்கியிருக்க கூடாது தானே? எனக்கு முன்னறிவித்தல் வழங்காமல் எனது பிரேரணையை நிராகரித்துள்ளீர்கள். நான் சபையின் கௌரவ உறுப்பினர் என்னை அவமதித்துள்ளீர்கள். இச்சபையில் எத்தனையோ நல்ல விடயங்களுக்கு நான் முன் நின்று தாங்களுக்கு உதவியுள்ளேன். என்ன வேலைப்பளு இருந்தாலும் நிதிக்குழுவிற்கு நேரத்திற்கு வந்து நிற்பேன். எத்தனையோ விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளேன். அப்படி இருக்கும் போது என்னை பழிவாங்கும் நோக்கில் தான் இதனை நிராகரித்தீர்கள். இதேபோல 02 சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. சபை தினத்தை அறிவித்திருந்தால் நான் நேரத்திற்கு பிரேரணையை வழங்கியிருப்பேன். அறிவிக்கப்படவில்லை. எனது பிரேரணை நிராகரிக்கப்பட்டதற்கு கட்டாயம் எழுத்து மூலமான கடிதமொன்று வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்கள் செயலாளரிடம் பிரேரணை கையளித்திருக்கிறார். ஆனால் அவரின் பிரேரணைகளை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்காமைக்கு அறிவித்தல் வழங்கப்படவில்லை. சபையில் அடுத்த சபைக்கான திகதி அறிவிக்கப்படவும் இல்லை. அதுபோல அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிற்கும் பாரியளவு இடையூறுகள் இடம்பெற்றுள்ளது. இதனை நான் கண்டிக்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உப தவிசாளர் அவர்களே, இவரது பிரேரணை மட்டுமல்ல கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களின் பிரேரணையும் காலதாமதமாக கிடைத்ததால் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நல்லாட்சி காலத்தில் சபை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் செயலாளரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று கூறியது போது உடனடியாக அப்போதிருந்த அரசாங்கத்தினூடாக எங்களின் தலைவர்களினூடாக

தொடர்பு கொண்டிருந்தேன். பிரேரணையை வாங்க வேண்டியது செயலாளரின் கடமை தானே, அதனை வாங்க முடியாதென செயலாளர் பதிலளிப்பது பிழை.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

எனக்கும் பிரேரணைகளை முன்வைக்க தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

காலதாமதமாக கொடுத்த எந்த பிரேரணையும் இணைக்கவில்லை. வேறெந்த எண்ணமும் இல்லை. அடுத்ததாக கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையின் நிதி நிலைமையை கருத்திற்கொண்டு கௌரவ தவிசாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் எரிபொருள் செலவு மற்றும் எனைய கொடுப்பனவு தொடர்பான பிரேரணை தவிசாளரின் வாகனத்திற்கு 90,000ரூபா மாதம் வழங்கப்படுகின்றது. இதில் அண்மையில் சகல அரச நிறுவனங்களிலும் செலவுகளை கட்டுப்படுத்துமாறு நிதி அமைச்சர் கூறியிருந்தார். அந்த அடிப்படையில் கூற வருகின்றேன். பாரியளவு செலவு தவிசாளருக்காக சபையில் மேற்கொள்ளப்படுகின்றது. இருந்தும் மேலும் ஒரு 10,000.00ரூபா மேலதிக தேவைக்கு வழங்கப்படுகின்றது. இதில் நிதிஅமைச்சர் கூறியதுபோல ஏதாவதொரு செலவை தவிசாளர் குறைத்துக்கொள்ள வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

எந்த சபையிலும் இல்லாதவொரு புது விடயமல்ல இது. தவிசாளர் என்பவருக்கு என்ன வரப்பிரசாதங்கள் உள்ளதோ அதை தான் நான் அனுபவிக்கின்றேன். அதனையும் அதிகமாக அனுபவிக்கவில்லை. எனக்கு மாதாந்தம் 600 லீற்றர் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நான் அந்த 600 லீற்றரையும் பயன்படுத்தவதில்லை. ஏனைய உறுப்பினர்களுக்கு தொலைபேசி, போக்குவரத்து செலவுகள் வழங்கப்படுகின்றது. நான் தூர இடங்களுக்கு செல்லும் போது நான் சாப்பிட வேண்டும் சாரதிக்கு உணவு வாங்கிக்கொடுக்க வேண்டும். இத்தோடு இவ்வியத்தை 03 சபைகளில் கலந்துரையாடியிருக்கின்றீர்கள்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சரி, கடந்த 06 மாதங்களில் ஊரடங்கு வந்தது, அப்போது பாரியளவு நிதி இதற்கு செலவிடப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ ஆளுனர், கௌரவ

இராஜாங்க அமைச்சர் போன்றோர் அந்நேரத்திலும் எத்தனை கூட்டங்களுக்கு அழைத்துள்ளார்கள் என்று பாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மாதாந்த எரிபொருளுக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகின்றது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்த சபையில் இதற்கான பதிலை கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பிரேரணை ஏற்கனவே முன்வைக்கப்பட்டு விட்டது. அவ்வாறானால் பிரேரணையில் உள்ள விடயங்களுக்கு பதிலளிக்க தயாராக தானே வந்திருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தவிசாளரின் சலுகைகள் வசதிகளுக்கு நாங்கள் எவ்வித இடையூறுகளையும் தெரிவித்ததில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாகவே நிறைய தடவைகள் கேள்வி எழுப்பப்பட்டு விட்டனவே.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஏன் இதனை நான் கூறுகின்றேன் என்றால், மக்களின் வாக்குகளை பெற்று நாங்கள் இங்கு வந்துள்ளோம். எந்தவொரு தேவைக்காக நாங்கள் சபைக்கு வந்தாலும் அல்லது எமக்கு வாக்களித்தவர் சபைக்கு வந்தால் நாங்கள் வெளியில் இருந்து தான் பேச வேண்டி உள்ளது. உப தவிசாளருக்கு கூட அறையொன்று உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

காரியாலயத்தில் அவ்வளவு தான் இடமுள்ளது. மேலதிகமாக மேசை, கதிரைகள் போட இடமில்லை. கடந்த வாரம் கூட நான் உள்ளூராட்சி சபைக்கு சென்ற போது, புதிய கட்டிடம் அமைக்கும் வரை தற்போதுள்ள காரியாலயத்தை சற்று விரிவுப்படுத்த இயலுமா என்று கேட்டேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

புதிதாக சில உத்தியோகத்தர்கள் வந்துள்ளனர். அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்துக்கொடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் அவமானப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அன்று நான் தாங்களை சந்திக்க 01 மணி நேரமாக வெளியில் நின்றுக்கொண்டிருந்தேன், தாங்கள் ஒரு தோட்ட முகாமையாளர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்தீர்கள். தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் அழைப்பை எடுக்கவில்லை. கௌரவ உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்கள் தொலைபேசியினூடாக தொடர்பு கொண்ட போது 05 நிமிடங்கள் காத்திருக்குமாறு நான் கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இறைச்சி கடைகள் திருத்தியமைக்கப்படுகின்றது, அவ்வாறு நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்து ஒரு 03 இலட்சம் ரூபா செலவழித்து கௌரவ உறுப்பினர்கள் அமர்ந்து வேலை செய்ய ஒரு இடத்தை தயார்படுத்திக்கொடுத்தால் என்ன? இது ஒரு பாரிய பிரச்சினை.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உப தவிசாளரின் அறை தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலே தான் உள்ளது, தினமும் சபைக்கு வரும் உறுப்பினர்களுக்கு அவ்விடத்தையாவது பெற்றுத்தரவும். சபைக்கு நாங்கள் எவ்வளவே நிதியினை கொண்டு வருகின்றோம். உறுப்பினர்களுக்கான பிரயாண செலவு கூட மிகவும் குறைவு, கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கு மாதாந்தம் 5000.00 ரூபா வழங்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களை யாரும் சந்திக்க வந்தால் வெளியில் வைத்து பேச முடியாது தானே? அதே போல தான் எங்களுக்கும். நாங்கள் அவமானப்படுகின்றோம். கொடிக்கம்பம் போட்டுள்ள சீமெந்தில் அமர்ந்து நாங்கள் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையில் உப தவிசாளருக்கு வழங்கப்பட்டுள்ள காரியாலயம் பற்றி பேசப்பட்டது. சபை ஆரம்பித்த காலப்பகுதியில் எனக்குள்ள கடமைகள் பற்றி நான்

கௌரவ தவிசாளரிடம் கேட்டிருந்தேன். தவிசாளர் அவர்கள் 02 முறை வெளிநாடு சென்றிருந்த போது பதில் கடமையை முறைப்படி பொறுப்பேற்று எனது கடமைகளை நான் சரியாக செய்திருந்தேன். தவிசாளர் இங்கு இல்லாதா சந்தர்ப்பங்களில் தான் நான் காரியாலயத்திற்கு வந்து பதில் கடைமை செய்ய முடியும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

எல்லா சபைகளில் உள்ள தவிசாளர்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்கள் தான் எனக்கும் வழங்கப்படுகின்றது. எனினும் தொடர்ந்து ஏன் இச்சபையில் மாத்திரம் இவ்வாறு எனக்கு அளிக்கப்பட்டுள்ள வாகனம், எரிபொருள், பிரயாண செலவுகள் பற்றி தொடர்ச்சியாக கேள்வி எழுப்பப்படுகின்றதென தெரியவில்லை. இவ்வாறு தொடர்ந்து கேட்பது எனக்கும் மன வருத்தத்தை ஏற்படுத்துகின்றது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அடுத்த நிதிக்குழுவிற்கு நான் வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன், கௌரவ உறுப்பினர்கள் அமர்ந்து வேலை செய்ய ஒரு அறையை அமைத்துக்கொடுக்க நிதிக்குழு சிபாரிசு செய்ய வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

சபையில் பொதுவாக ஒரு இடத்தை கௌரவ உறுப்பினர்களுக்கு ஒதுக்கி தரவும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எங்களது சபைக்கு வருகை தந்துள்ள நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏதாவது ஒரு கூட்டம் மூலமாக சரி கௌரவ உறுப்பினர்களை அறிமுகப்படுத்தவும். யாரென்று தெரியாத ஒரு சந்தர்பங்களில் இவ்விடயம் சிக்கலை ஏற்படுத்துகின்றது. வரிபணம் அதிகரிக்கக்கூடாது என்பதற்காக கடிதமொன்று வந்துள்ளது. அதே போல இறைச்சிக்கடை, மீன் கடைகளுக்கான டென்டர் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது, இது நுகர்வோரை பாதித்துவிடக்கூடாது. இதில் ஆணையாளர் அவர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக தான் பிரேரணையை முன்வைத்தேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஒவ்வொரு முறையும் டென்டர் தொகையினை கடந்த முறையை விட சற்று அதிகரித்து தான் போட வேண்டும். ஏனைய பிரேரணைகள் அடுத்தமாத சபை நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்படும். இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி.இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**